தமிழ் நாடு சட்டமன்ற மேலவை

வியாழக் கிழமை, 1974 ஏப்ரல் 11

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணி அளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (திரு. சி. பி. சிற்றரசு) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

Tamil Nadu Tourism Development Corporation

* 301 *Q.*—THIRU L. BALARAMAN (on behalf of THIRU V. ISVARMURTI): Will the Hon. the Minister for Education be pleased to state the steps taken by the Tamil Nadu Tourism Development Corporation to improve Tourist Traffic in the State?

தமிழ் நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்

திரு. எல். பலராமன் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

இம்மாநிலத்தில் சுற்றுலாப் பயணிகளை அதிகமாகக் கவரும் விதத்தில் தமிழ் நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தமிழ் நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், தமிழ்நாட்டில் முக்கியமான இடங்களில் சுற்றுலா மாளிகைகளை நடத்தி வருகிறது. அம்மாளிகைகளில் நவீன வசதிகள் அனைத்தும் உள்ளன. சுற்றுலா மாளிகைகள் அனைத்திலும் உணவகங்கள் உள்ளன. சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக ஏர்க்காடு, உதகமண்டலம், கோடைக்கானல் ஆகிய இடங்களிலுள்ள சுற்றுலா மாளிகைகளிலும், கன்னியாகுமரி 'கேப்' ஓட்டலிலும், மது அருந்தும் அறைகளும் தொடங்கப் பட்டுள்ளன.

மேலும் இக்கழகம், சென்னையிலிருந்து மாமல்லபுரத்திற்கு அன்றுடம் திட்ட மிட்ட சுற்றுலா பயணத்தையும், தமிழ்நாட்டில் சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் அனைத்திற்கும் செல்வதற்கு 7 நாட்கள் திட்டமிட்ட பயணத்தை மாதத்திற்கொருமுறையும் நடத்துகிறது.

இதைத்தவிர, இக்கழகம் 1974 ஜனவரி திங்களில் சென்னை மாநகரில் பொங்கல் சுற்றுலா விழா பொருட்காட்சியை நடத்தியுள்ளது. இப்பொருட் காட்சியை ஆண்டுதோறும் நடத்தக் கருதப்பட்டுள்ளது.

திரு. எல். பலராமன் : மாண்புமிகு தலைவரவர்களே, இந்தச் சுற்றுலா பொருட்காட்சியை மாவட்டங்கள் வாரியாக நடத்துவதற்கு, அரசிடம் செயற் குறிப்பு ஏதேனும் உண்டா? வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள ஏலகிரி மலைப் பகுதியைச் சுற்றுலா காட்சி இடமாக அமைக்க அரசாங்கம் பரிசீலித்து வருகிறதா? அவ்வாறு ஒரு எண்ணம் இருப்பதாக நான் இரண்டு, மூன்று தினங்களுக்கு முன்பு அறிய வந்தது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இந்தப் பொங்கல் சுற்றுலாப் பொருட்காட்சி இப்பொழுது சென்னையில் மட்டும்தான் நடைபெற்றது. பொங்கல் சுற்றுலா விழா திருச்சி, மதுரை, மாமல்லபுரம், கன்னியாகுமரி ஆகிய இடங்களில் மட்டும் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டி ருக்கிறது. ஆண்டுதோறும் எல்லா மாவட்டத் தலைநகரங்களிலும் பொங்கல் சுற்றுலா விழாவையும், கலை நிகழ்ச்சிகளையும் பொருட்காட்சியையும் வைக்க லாமா என்று அரசு கருதிக்கொண்டிருக்கிறது.

ஏலகிரி மலைப்பகுதியைச் சுற்றுலா இடமாக அமைத்திடுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் இருக்கிறதா என்பதுபற்றிய தகவல் இப்பொழுது என்னிடம் இல்லை. தனிக் கேள்வி போட்டால், பதில் சொல்ல இயலும்.

THIRU S. NARAYANASWAMY : Sir, will the Hon. the Minister for Tourism consider the question of making life a little more easy for residents in hill stations and at least see that the roads are kept in good repair? The roads there which are used both by tourists and by the people who live there are not being repaired at all. Personally, for the last eight years, I have been asking for a road to be laid to the Kurinji Andavar Temple at Kodaikanal and nothing has been done. The Hon. Minister is well aware of the difficulties. Will something be done in the matter because the Township Council does just nothing at all?

1974 ஏப்ரல் 11]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் கொடைக்கானல், உதகை போன்ற மலை வாசஸ்தலங்கள். அங்கேயிருக்கக்கூடிய நகராட்சிகள், நகரியங்கள்தான் சாலை பராமரிப்பு போன்ற வேலைகளைக் கவனித்துக்கொண்டு வருகின்றன. அந்த நிர்வாகங்களுக்கு ஏற்கெனவே குறிப்பு அனுப்பி, சாலைப் பராமரிப்புகளில் அதிக கவனம் செலுத்த வேண்டுமென்று அரசு கேட்டுக்கொண்டிருக்கிறது. அது விஷயத்தில் சுற்றுலா வாரியமும் ஓரளவு கவனம் செலுத்திக்கொண்டு வருகிறது. பொதுவாக நிதி வசதியை இன்னும் அதிகப்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று அவர்களும் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அரசும் கவனம் செலுத்தி வருகிறது.

திரு. கே. ராஜாராம் : தலைவரவர்களே, கொடைக்கானல், ஊட்டி போன்ற மலை வாசஸ்தல நகராட்சிகளில் போதிய நிதி வசதி இல்லை. ஆகவே அந்த சுற்றுலாத் துறையினருக்கு இன்னும் அதிகப் பணம் கொடுப்பதற்கு அரசு ஏற்பாடு செய்ய வேண்டும். அது மத்திய அரசாங்கமோ, மாநில அரசாங்கமோ, எதுவாகயிருந்தாலும், இன்னும் நிதி உதவி செய்து அந்தச் சாலைகளைச் சரிவரப் பராமரித்தால் மேலும் சுற்றுலாப் பயணிகளை நாம் கவர முடியும் என்பதை நான் அரசுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அதையறிந்து அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர்கள் கூறியதுபோல், கொடைக்கானல், ஏற்காடு, உதக மண்டலம் போன்ற இடங்களில் உள்ள நகராட்சிகளில் நிதி வசதி போதுமான அளவுக்கு இல்லை. மத்திய அரசு சுற்றுலாத் துறைச் செலவுக்கு இன்னும் கொஞ்சம் அதிகமாக நிதி உதவி செய்தால்தான் அவைகளை நல்ல முறையில் பராமரிக்க முடியும். ஆகவே நிதி ஒதுக்கீடு குறித்துத்தான் சங்கடம் இருந்து வருகிறது. எந்த முறையில் இவற்றைச் சீர் செய்ய முடியும் என்பதில் அரசு கவனம் செலுத்தும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எம். சங்கரலிங்கம் : தலைவரவர்களே, சுற்றுலாப் பயணிகளை அதிக அளவில் கவரும் வகையில், வெளிநாடுகளிலிருந்து வருகின்றவர்கள் உடன் அறிந்துகொள்ளும் பொருட்டு, தலைநகர் டெல்லி விமான நிலையத்திலும், இன்னும் இதர முக்கியமான இடங்களிலும் தமிழகத்தில் அமைந்துள்ள சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த இடங்களைப்பற்றிய விவரங்கள் அடங்கிய விளம்பரங்களை வைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன். அம்மாதிரிச் செய்தால், சுற்றுலா வரும் பயணிகள் எண்ணிக்கை அதிகரிக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இப்படிப் பட்ட விளம்பரங்கள் இப்பொழுது செய்யப்படவில்லை. சுற்றுலா இடங்களைப் பற்றிய விவரங்கள் அடங்கிய குறிப்பேடுகள் கொடுக்கப்பட்டு வருகின்றன. போஸ்டர் முதலியவைகள் எல்லாம் அனுப்பப்படுகின்றன. சுற்றுலா சம்பந்த மாக நடைபெறுகின்ற பல்வேறான விழாக்களில், சுற்றுலா இடங்களைப்பற்றிய விளம்பரங்கள் போடப்படுகின்றன. இது விஷயத்தில் மத்திய அரசும் உதவி செய்ய வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRU G. VASANTHA PAI : Sir, recently we saw in the papers that there was a move to have a rope-railway connecting Kodaikanal with Palni. May I know at what stage this move is?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இப்படிப் பட்ட ஒரு கருத்தை, இரண்டு மூன்று நாட்களுக்கு முன்பு ஒரு விழாவில் கலந்துகொண்ட ஒருவர் கூறியதாக நானும் பார்த்தேன். பழநி கோவில் தேவஸ்தானம் கொடைக்கானலுக்கும் பழநிக்கும் இணைப்பு செய்ய முயற்சிப்ப தாகக் கூறப்பட்டிருக்கிறது. அதுபற்றி சுற்றுலாத் துறைக்கு எந்த விவரமும் கிடைக்கவில்லை.

(பிற்பகல் 4-10)

Development of Tourism

* 302 *Q.*—THIRU L. BALARAMAN (on behalf of THIRUVALARGAL G. SWAMINATHAN and S. VELLAPANDIAN) : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that the State Government have suggested to the Centre, to allow them to import small planes from Switzerland for the purpose of developing tourism in the State;

(*b*) if so, the number proposed to be imported; and

(*c*) their total value?

சுற்றுலா வளர்ச்சியை மேம்படுத்துதல்

திரு. எல். பலராமன் (திரு. ஜி; சுவாமிநாதன், திரு; எஸ்; வெள்ள பாண்டியன் சார்பில்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம்மாநிலத்தில் சுற்றுலா வளர்ச்சியை மேம்படுத்த சுவிட்சர்லாந் திலிருந்து சிறு ரக விமானங்களை இறக்குமதி செய்ய அனுமதிக்கும்படி மத்திய அரசிடம் மாநில அரசு கருத்துத் தெரிவித்துள்ளது உண்மையா?